Adda247
GET IT ON Google Play

Sl. No. :

**GR2AT/17**

பதிவு எண் | | | | | | | | |

# 2017

# பொதுத் தமிழும் பொது அறிவும்
# (Degree Standard)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

β

[Turn over

# Test Prime

**ALL EXAMS, ONE SUBSCRIPTION**

**70,000+** Mock Tests

Personalised Report Card

Unlimited Re-Attempt

**600+** Exam Covered

Previous Year Papers

**500%** Refund

**ATTEMPT FREE MOCK NOW**

Adda247 GET IT ON Google Play

1. கரிசலாங்கண்ணி என்னும் மூலிகையை குறிக்காத பெயர்

(A) கரி சாலை

(B) கையாந்தகரை

(C) சிங்கவல்லி

(D) தேகராசம்

2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது.

– இக்குறளில் பயின்று வரும் பொருள்கோள் எது?

(A) நிரல்நிறைப் பொருள்கோள்

(B) ஆற்றுநீர் பொருள்கோள்

(C) மொழிமாற்றுப் பொருள்கோள்

(D) விற்பூட்டுப் பொருள்கோள்

3. 'கேண்மை' – இச்சொல்லின் எதிர்ச்சொல்.

(A) துன்பம்

(B) பகை

(C) நட்பு

(D) வலிமை

Adda247 GET IT ON Google Play

4. ‘பாலை நிலத்திற்குரிய பறவைகள்’ எவை?

(A) கிளி, மயில்

(B) நாரை, அன்னம்

(C) புறா, பருந்து

(D) கடற்காகம்

5. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

– இதில் அமைந்து வரும் மோனை.

(A) இணை மோனை

(B) பொழிப்பு மோனை

(C) ஒரூஉ மோனை

(D) கூழை மோனை

6. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்

துன்பம் உறுதல் இலன்

– இதில் அமைந்து வரும் தொடைநயம்.

(A) அடி முரண் தொடை

(B) அடி மோனைத் தொடை

(C) அடி இயைபுத் தொடை

(D) எதுவுமில்லை

7. ‘அரியவற்றுள்’ – இச்சொல்லை அசைபிரித்து சரியான விடையை எழுதுக.

(A) நிரை நேர் நேர்

(B) நிரை நிரை நேர்

(C) நிரை நேர் நிரை

(D) நேர் நேர் நிரை

Adda247 GET IT ON Google Play

8. சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம், எத்தனை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும்

(A) ஒன்றே கால் மாத்திரை

(B) ஒன்றரை மாத்திரை

(C) ஒன்றே முக்கால் மாத்திரை

(D) ஒரு மாத்திரை

9. "இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா" எனக் குறிப்பிடும் நூல்

(A) தொல்காப்பியம்

(B) நன்னூல்

(C) அகப்பொருள்

(D) அகத்தியம்

Adda247

10. பொருந்தாததை எடுத்து எழுதுக.

(A) அரசன் வந்தது – திணை வழு

(B) கபிலன் பேசினாள் – பால் வழு

(C) குயில்கள் கூவியது – எண் வழு

(D) கமலா சிரித்தாய் – கால வழு

Adda247 GET IT ON Google Play

11. பொருந்தாததை கண்டறிந்து எழுதுக.

(A) ஐந்து கிலோ – எடுத்தல் அளவை ஆகுபெயர்

(B) நாலு லிட்டர் – முகத்தல் அளவை ஆகுபெயர்

(C) மூன்று மீட்டர் – நீட்டல் அளவை ஆகுபெயர்

(D) இந்தியா வென்றது – உவமையாகுபெயர்

12. தொழிற் பெயரைக் கண்டறிக.

'வா' –

(A) வருதல்

(B) வந்து

(C) வந்தான்

(D) வந்த

13. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக

(A) காசு, கூறை, கைப்பிடி, கிளி, கேணி

(B) காசு, கிளி, கூறை, கேணி, கைப்பிடி

(C) கிளி, கைப்பிடி, காசு, கூறை, கேணி

(D) கேணி, காசு, கிளி, கூறை, கைப்பிடி

14. 'இனிய நண்ப' – இலக்கணக் குறிப்பு தருக

(A) குறிப்புப் பெயரெச்சம்

(B) தெரிநிலை பெயரெச்சம்

(C) எதிர்மறைப் பெயரெச்சம்

(D) குறிப்பு வினையெச்சம்

15. "எதிரூன்றல் காஞ்சி, எயில் காத்தல் நொச்சி" – இதில் நொச்சி என்பது

(A) மதில் காத்தல்

(B) மதில் வளைத்தல்

(C) மதில் பூச்சூடல்

(D) மதில்வாகை சூடல்

Adda247 GET IT ON Google Play

16. சொல்லை பொருளோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வனப்பு | 1. | வலிமை |
| (b) | அடவி | 2. | அழகு |
| (c) | வீறு | 3. | இனிமை |
| (d) | மதுரம் | 4. | காடு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

17. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திரிகடுகம் | 1. | பெருவாயின் முள்ளியார் |
| (b) | ஆசாரக்கோவை | 2. | நல்லாதனார் |
| (c) | பழமொழி நானூறு | 3. | காரியாசான் |
| (d) | சிறுபஞ்சமூலம் | 4. | முன்றுறை அரையனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

Adda247

18. தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?

(A) கபிலர்

(B) நரிவெரூஉத் தலையார்

(C) அறியப்படவில்லை

(D) ஓதலாந்தையார்

19. ஐஞ்சிறு காப்பியங்கள் – என்னும் வகைப்பாட்டில் இல்லாத நூல் எது?

(A) நாக குமார காவியம்

(B) நீலகேசி

(C) குண்டலகேசி

(D) சூளாமணி

Adda247 GET IT ON Google Play

20. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' – எனப் பாடியவர்

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) சுரதா

(D) திருவள்ளுவர்

21. கல்லை சேர்த்துக் கட்டிக் கடலில் எறிந்தபோது கல்லினை தெப்பமாகக் கொண்டு கரையேறியவர்

(A) பெரியாழ்வார்

(B) அப்பூதியடிகள்

(C) மாணிக்கவாசகர்

(D) அப்பர்

22. "ருபாயத்" என்பதன் பொருள்

(A) மூன்றடிச் செய்யுள்

(B) நான்கடிச் செய்யுள்

(C) இரண்டடிச் செய்யுள்

(D) ஐந்தடிச் செய்யுள்

23. அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் வைத்து, திருக்குறளைப் பாதுகாக்கும் நாடு எது?

(A) இங்கிலாந்து

(B) சீனா

(C) உருசிய நாடு

(D) அமெரிக்கா

Adda247 GET IT ON Google Play

24. வைதோரைக் கூட வையாதே – இந்த

வையமுழுதும் பொய்த்தாலும் பொய்யாதே

–இவ்வரியை பாடியவர்

(A) குடும்பைச் சித்தர் (B) கடுவெளிச்சித்தர்

(C) திருமூலர் (D) கவிமணி

25. 26 முதல் 32 வயது வரை உடைய பருவ மகளிர்

(A) மடந்தை (B) அரிவை

(C) மங்கை (D) தெரிவை

26. குமரகுருபரர் எம் மொழிகளில் புலமைமிக்கவர்

(A) தமிழ், வடமொழி

(B) தமிழ், வடமொழி, இந்துத்தானி

(C) தமிழ், மலையாளம்

(D) தமிழ், ஆங்கிலம்

27. "உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்" என்று கூறியவர்

(A) கம்பர் (B) திருவள்ளுவர்

(C) இளங்கோவடிகள் (D) வள்ளலார்

28. "இயற்படு பொருளால் கண்டது மறந்து

முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல்"

– இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

(A) சீவகசிந்தாமணி (B) சிலப்பதிகாரம்

(C) மணிமேகலை (D) கம்பராமாயணம்

29. "ஒன்று கொலாம்" என்னும் திருப்பதிகம் பாடியவர் யார்?

(A) சேக்கிழார் (B) திருநாவுக்கரசர்

(C) இளங்கோவடிகள் (D) பாரதியார்

Adda247

Adda247 GET IT ON Google Play

30. தமிழ் மூவாயிரம் எனப்படும் நூல் எது?

(A) தேவாரம் (B) திருவாசகம்

(C) திருமந்திரம் (D) திருக்குறள்

31. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே'– என்று பாடிய புறநானூற்றுப் புலவர்

(A) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

(B) கணியன் பூங்குன்றனார்

(C) நரிவெரூஉத் தலையார்

(D) ஔவையார்

32. உலகம் முழுவதையும் ஆலிக்கருதுபவர் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?

(A) படை வரும் வரை (B) காலம் வரும் வரை

(C) பணம் வரும் வரை (D) பலம் வரும் வரை

33. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

(A) உமறுப்புலவர் (B) சீதக்காதி

(C) அபுல்காசிம் (D) திருநாவுக்கரசர்

34. பொருத்துக :

(a) காகம் 1. கூவும்

(b) குதிரை 2. கரையும்

(c) சிங்கம் 3. கனைக்கும்

(d) குயில் 4. முழங்கும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

35. 'மூலன்' என்னும் இயற்பெயரை உடையவர்

(A) திருமூலர் (B) அப்பர்

(C) சாத்தனார் (D) தாயுமானவர்

Adda247

Adda247 GET IT ON Google Play

36. "ஒரு நாடு வளமுடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்" - எனக் கூறியவர் யார்?

(A) பாரதியார்
(B) அம்பேத்கார்
(C) பெரியார்
(D) அறிஞர் அண்ணா

37. இந்திய நாட்டை, 'மொழிகளின் காட்சிச் சாலை' என்று கூறியவர்

(A) குமரிலபட்டர்
(B) கால்டுவெல்
(C) ச. அகத்தியலிங்கம்
(D) ஈராஸ் பாதிரியார்

38. 'நவ்வி' – இச்சொல்லின் பொருளை எழுதுக.

(A) மான்
(B) நாய்
(C) புலி
(D) பசு

39. "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை" எனக் கூறியவர்

(A) காந்தியடிகள்
(B) பாரதியார்
(C) பசும்பொன் முத்துராமலிங்கர்
(D) பாரதிதாசன்

40. குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்தப்படுவது

(A) கார்பன் டை ஆக்சைடு
(B) ஆக்சிஜன்
(C) குளோரோஃபுளுரோ கார்பன்
(D) மீத்தேன்

41. 'தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்' - எனக் கூறியவர்

(A) டாக்டர் கிரௌல்
(B) கால்டுவெல்
(C) வீரமாமுனிவர்
(D) ஜி.யு. போப்

Adda247 GET IT ON Google Play

42. ‘தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப் படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு’ – இக்கடிதப் பகுதி யாருடையது?

(A) திரு.வி. கலியாண சுந்தரனார்

(B) மு. வரதராசனார்

(C) பேரறிஞர் அண்ணா

(D) ஜவஹர்லால் நேரு

43. “தேசியம் காத்த செம்மல், எனத் திரு.வி. கல்யாண சுந்தரனாரால் பாராட்டப்பெறுபவர்”.

(A) அம்பேத்கர்

(B) அண்ணா

(C) முத்துராமலிங்கர்

(D) பெரியார்

44. காமராசரின் அரசியல் குரு

(A) காந்தியடிகள்

(B) பேரறிஞர் அண்ணா

(C) நேரு

(D) சத்திய மூர்த்தி

45. “பாவலரேறு பெருஞ்சித்திரனார்” எழுதாத நூல் எது?

(A) பாவியக் கொத்து

(B) பள்ளிப் பறவைகள்

(C) கொய்யாக் கனி

(D) குறிஞ்சித் திட்டு

Adda247
GET IT ON Google Play

46. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்று கூறியவர்

(A) அம்பேத்கர்

(B) கெல்லட்

(C) கமில்சுவலபில்

(D) முனைவர் எமினோ

47. ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தை கைக் கொண்டு வாழவிடுவதே தருமம்" – எனக் கூறியவர்

(A) இராணி மங்கம்மாள்

(B) அஞ்சலையம்மாள்

(C) வள்ளியம்மை

(D) வேலுநாச்சியார்

Adda247

48. உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வை விட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர். உன் நலத்தை விட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும் போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு - இக்கூற்று யாருடைய கடிதப் பகுதி?

(A) பேரறிஞர் அண்ணா

(B) அன்னை இந்திராகாந்தி

(C) மு. வரதராசனார்

(D) திரு.வி.க.

Adda247 GET IT ON Google Play

49. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) குண்டலகேசி

(D) வளையாபதி

50. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருவரங்கம் | 1. | சிதம்பரம் |
| (b) | திருச்சிற்றம்பலம் | 2. | ஸ்ரீரங்கம் |
| (c) | திருமறைக்காடு | 3. | மீனாட்சி |
| (d) | அங்கயற்கண்ணி | 4. | வேதாரணியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

Adda247

51. மதுரையில் உலகத் தமிழ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

(A) 1981

(B) 1982

(C) 1983

(D) 1985

Adda247
GET IT ON Google Play

52. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை

எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை.

– எனக் கவிதை பாடியவர்.

(A) சுரதா

(B) கண்ணதாசன்

(C) பாரதிதாசன்

(D) மு. மேத்தா

53. எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்

இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

– எனப் பாடியவர்.

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) சுரதா

(D) கண்ணதாசன்

Adda247

54. மரக்கலத்தை குறிக்கும் நான்கு சொற்களை தேர்ந்தெடுக்க

(A) கலம், தோணி, புணரி, மிதவை

(B) கலம், பரிசில், ஓடம், பரவை

(C) கலம், வங்கம், புணை, அம்பி

(D) கலம், பரிசில், ஆழி, பஃறி

Adda247 GET IT ON Google Play

55. பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மீனாட்சி | 1. | அங்கயற்கண்ணி |
| (b) | மதுரவசனி | 2. | வாள்நெடுங்கண்ணி |
| (c) | கட்கநேத்ரி | 3. | நீள்நெடுங்கண்ணி |
| (d) | விசாலாட்சி | 4. | தேன்மொழிப்பாவை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

56. பிழையற்றத் தொடரைத் தேர்வு செய்க.

(A) ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவருடை மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

(B) ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

(C) ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

(D) ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

Adda247

57. "மாகதம்" எனப்படுவது

(A) மதுரகவி

(B) சித்திரகவி

(C) வித்தாரகவி

(D) ஆசுகவி

58. அகத்திணையின் வகைகள்

(A) ஐந்து

(B) ஆறு

(C) மூன்று

(D) ஏழு

Adda247 GET IT ON Google Play

59. கரணத்தேர் ———— எனப் பிரியும்.

(A) கரணம் + தேர்

(B) கரணத்து + ஏர்

(C) கரன் + அத்து + ஏர்

(D) காரணம் + தேர்

60. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

(A) இல்லாரை எள்ளுவர் செல்வரை எல்லாரும்

(B) இல்லாரை செல்வரை எல்லாரும் எள்ளுவர்

(C) இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை

(D) செல்வரை எல்லாரும் எள்ளுவர் இல்லாரை

Adda247

61. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

(A) குணநலம் நலனே சான்றோர் பிறநலம்

(B) சான்றோர் நலனே குணநலம் பிறநலம்

(C) குணநலம் சான்றோர் நலனே பிறநலம்

(D) சான்றோர் குணநலம் நலனே பிறநலம்

Adda247 GET IT ON Google Play

62. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்

(A) பகுதி, சந்தி

(B) இடைநிலை, சாரியை

(C) பகுதி, விகுதி

(D) விகுதி, சாரியை

63. உறுவேனில் – இலக்கணக் குறிப்பு யாது?

(A) வினைத்தொகை

(B) உரிச்சொற்றொடர்

(C) பண்புத்தொகை

(D) வினையெச்சம்

64. "இறை, செப்பு" என்பன கீழ்க்கண்ட எச்சொல்லுக்கு வழங்கும் வேறுபெயர்கள்

(A) வினா

(B) மொழி

(C) விடை

(D) இறைவன்

65. கீழ்க்காணும் தொடரில் சரியான விடையை தேர்வு செய்க.

(A) யானையின் கண் சிறியது

(B) யானையின் கண்கள் சிறியது

(C) யானையின் கண்கள் சிறியன

(D) யானையின் கண் சிறியன

Adda247 GET IT ON Google Play

66. ஓடையில் யானையும் யானைக் ———————— ம் நின்றன.

(A) யானைக் கன்று

(B) யானைக் குட்டி

(C) யானைக் குருளை

(D) யானைப் பிள்ளை

67. Refrigerator – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க

(A) குளிர் பதனப் பெட்டி

(B) குளிரூட்டும் பெட்டி

(C) குளிர்சாதனப் பெட்டி

(D) குளிர் காக்கும் பெட்டி

68. 'கோ' – இச்சொல்லின் உரிய பொருளைக் கண்டறிக

(A) அரசன்

(B) அன்னம்

(C) ஆதவன்

(D) அன்பு

69. உவமை விளக்கும் பொருளை கண்டறிந்து பொருத்துக :

(a) அத்திப் பூத்தது போல — 1. ஒற்றுமை

(b) உயிரும் உடம்பும் போல — 2. பயனில்லை

(c) ஆற்றில் கரைத்த புளி — 3. வேதனை

(d) இடிவிழுந்த மரம் போல — 4. அரிய செயல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

Adda247 GET IT ON Google Play

70. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்"

– இவ்வரிகள் இடம்பெற்ற நூலின் பெயர்.

(A) தேவாரம்
(B) திருவாசகம்
(C) ஏர் எழுபது
(D) திருக்கோவை

71. "கேழல்" என்பதன் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

(A) எருமை
(B) புலி
(C) கரடி
(D) பன்றி

72. பட்டியல் I ஐ பட்டியல் II டன் பொருத்தி விடை எழுது.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | திருஞானசம்பந்தர் | 1. | திருவாதவூர் |
| (b) | திருநாவுக்கரசர் | 2. | திருவெண்ணெய் நல்லூர் |
| (c) | சுந்தரர் | 3. | திருவாமூர் |
| (d) | மாணிக்கவாசகர் | 4. | சீர்காழி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

Adda247

73. "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி

காமம் செப்பாது கண்டது மொழிமோ"

– இவ்வரிகள் இடம்பெற்ற நூல் எது?

(A) நற்றிணை
(B) கலித்தொகை
(C) குறுந்தொகை
(D) புறநானூறு

74. "தேம்பாவணி" எத்தனை காண்டங்களை உடையது

(A) இரண்டு
(B) மூன்று
(C) நான்கு
(D) ஐந்து

Adda247 GET IT ON Google Play

75. பொருந்தாத இணையைக் கண்டறிக :

(A) மேதி – எருமை

(B) சந்தம் – அழகு

(C) கோதில் – பசு

(D) அங்கணர் – சிவன்

76. பொருத்துக : பொருளறிந்து பொருத்துக.

(a) நயனம் 1. இருள்

(b) இந்து 2. புன்னகை

(c) முறுவல் 3. கண்கள்

(d) அல் 4. நிலவு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

77. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

(A) பன்னாடு தந்த மாறன் வழுதி

(B) இளம் பெருவழுதி

(C) உக்கிரப் பெருவழுதி

(D) பாண்டியன் மாறன் வழுதி

78. உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக.

புரிசை

(A) வேகம் (B) வளம்

(C) மதில் (D) மேகம்

79. சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க

"உரும"

(A) இடுப்பு (B) இடி

(C) மேகம் (D) கதிரொளி

Adda247 GET IT ON Google Play

80. குலசேகர ஆழ்வார் இயற்றிய நூல் எது?

(A) நந்திக்கலம்பகம்

(B) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்

(C) கலித்தொகை

(D) நற்றிணை

81. கள்ள வேடம் புனையாதே – பல

கங்கையில் உன்கடம் நனையாதே

–இதில் 'கடம்' என்பதன் பொருள்

(A) உடம்பு

(B) கால்கள்

(C) கைகள்

(D) தலை

82. திருஞானசம்பந்தருக்கு தொடர்பில்லாத தொடரை தேர்ந்தெடுக்க.

(A) உமையாள் பொற்கிண்ணத்தில் அளித்த ஞானப்பாலை உண்டார்

(B) 220 தலங்கள் வழிப்பட்டார்

(C) திராவிடச் சிசு என ஆதிசங்கரரால் குறிப்பிடப்பட்டார்

(D) அப்பூதியடிகளின் மூத்த மகனை உயிர் பெற செய்தார்

83. உமறுப்புலவர் பாடிய முதுமொழி மாலை என்ற நூலில் உள்ள பாக்கள்

(A) 120 பாக்கள்

(B) 204 பாக்கள்

(C) 80 பாக்கள்

(D) 67 பாக்கள்

84. சாலை இளந்திரையன் தமிழக அரசின் "பாவேந்தர் விருது" பெற்ற ஆண்டு எது?

(A) 1990

(B) 1991

(C) 1993

(D) 1994



Adda247

Adda247 GET IT ON Google Play

85. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது

(A) பாண்டிய மன்னன்

(B) குலசேகர ஆழ்வார்

(C) மூன்றாம் நந்திவர்மன்

(D) பல்லவ மன்னன்

86. எட்டுத் தொகை நூல்களுள் முதலாவதாக அமைந்த நூல்

(A) குறுந்தொகை

(B) நற்றிணை

(C) ஐங்குறுநூறு

(D) பதிற்றுப்பத்து

87. சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர் யார்?

(A) உமறுப்புலவர்

(B) கம்பர்

(C) நாமக்கல் கவிஞர்

(D) பாரதியார்

88. சரியான தொடரைக் கண்டறிக.

இரட்டைக் காப்பியம் என்பன

(A) மணிமேகலையும், சீவக சிந்தாமணியும்

(B) சிலப்பதிகாரமும், வளையாபதியும்

(C) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்

(D) மணிமேகலையும், வளையாபதியும்

89. வெள்ளிப்பிடி அருவா

ஏ! விடலைப் பிள்ளை கைஅருவா

சொல்லியடிச்ச அருவா

—எப்பாடல் வகையை சார்ந்தது

(A) தொழிற் பாடல்

(B) விளையாட்டுப் பாடல்

(C) ஒப்பாரி பாடல்

(D) சடங்குப் பாடல்

90. "யாமறிந்த புலவரிலே இளங்கோவைப் போல்" — என இளங்கோவைப் புகழ்ந்து பாடியவர் யார்?

(A) வாணிதாசன்

(B) கணியன்

(C) பாரதியார்

(D) பாரதிதாசன்

Adda247 GET IT ON Google Play

91. தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட முதல் தேசிய சமுதாய நாடகம் எது?

(A) கதரின் வெற்றி

(B) தேசியக் கொடி

(C) தேச பக்தி

(D) தமிழ்தேசியம்

92. படித்துப்புரிந்து சரியான விடையைத் தேர்ந்தெடு

1. தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும்
2. நீ அதைத் தேடிக்கொண்டு போய் அலையாதே
3. நீ தேட வேண்டுவது தொண்டு
4. தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து என்பது உன் நெறியாக இருக்கட்டும்

(A) நேரு எழுதிய கடிதவரிகள்

(B) மு.வ. எழுதிய கடிதவரிகள்

(C) அண்ணா எழுதிய கடிதவரிகள்

(D) காந்தி எழுதிய கடிதவரிகள்

Adda247

93. "வட்ட மேசை மாநாடு நடந்த ஆண்டு"

(A) 1915

(B) 1917

(C) 1930

(D) 1932

Adda247 GET IT ON Google Play

94. ‘பகுத்தறிவுக் கவிராயர்’ எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்

(A) ந. பிச்சமூர்த்தி

(B) உடுமலை நாராயணகவி

(C) சுரதா

(D) வாணிதாசன்

95. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எட்வர்டு மை பிரிட்சு | 1. | ஒருவர் மட்டும் பார்க்கும் படக் கருவி |
| (b) | எடிசன் | 2. | இயக்கப்படம் |
| (c) | ஈஸ்ட்மன் | 3. | ஓடும் குதிரையை வைத்து இயக்கப் படம் |
| (d) | பிரான்சிஸ் சென்கின்சு | 4. | படசுருள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

96. பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக பணியமர்த்தப்பட்ட ஆண்டு

(A) 08.05.1974

(B) 05.01.1981

(C) 07.02.1902

(D) 12.04.1976

97. தமிழர் புலம் பெயரக் காரணங்கள்

(A) பஞ்சம், அந்நியர் படையெடுப்பு

(B) வறுமை, மேலை நாட்டின் மோகம்

(C) வாணிகம், தமிழ்நாட்டில் வாழ விருப்பம் இன்மை

(D) வாணிகம், வேலை வாய்ப்பு

Adda247 GET IT ON Google Play

98. முதன் முதலில் இயக்கப்படமாக எடுக்கப்பட்ட விலங்கு

(A) குதிரை

(B) நாய்

(C) பூனை

(D) மான்

99. பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள் ________ வகைப்படும்.

(A) இரண்டு

(B) மூன்று

(C) நான்கு

(D) ஐந்து

Adda247

100. இந்தியாவில் மட்டுமல்லாமல் ________, ________ ஆகிய நாடுகளில் குடியரசுத் தலைவர்களாகவும், தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது.

(A) சிங்கப்பூர், மலேசியா

(B) சிங்கப்பூர், மொரிசியசு

(C) சிங்கப்பூர், இலங்கை

(D) சிங்கப்பூர், பினாங்கு